# உயர்ந்த நெறிகளால் மட்டுமே ஒருவர் மதிக்கப்படுவார்

## எஸ்ஆர்எம் பல்கலையில் குன்றக்குடி அடிகளார் கருத்து

**சென்னை**

எஸ்ஆர்எம் பல்கலைக்கழகத்தின் தமிழ் பேராயம், சாகித்ய அகாடமி மற்றும் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் ஆகியவை இணைந்து தவத்திரு குன்றக்குடி அடிகளார் நூற்றாண்டு கருத்தரங்கத்தை நேற்று நடத்தின.

சாகித்ய அகாடமியின் தமிழ் ஆலோசனைக் குழு ஒருங்கிணைப்பாளர் இரா.தாமோதரன் (அறவேந்தன்) நிகழ்ச்சியின் நோக்கவுரை நிகழ்த்தும்போது, குன்றக்குடி அடிகளாரின் பெருமைகளைப் பகிர்ந்தார். "எதுவாக இருந்தாலும் அறிவியல் கண்ணோட்டத்தில் காண குன்றக்குடி அடிகளார் வலியுறுத்தினார். நம் வாழ்க்கையை மாற்ற கல்வியை மட்டுமே கையிலெடுக்க வேண்டும்.

இதற்கு மாணவர்கள் அனைவரும் அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றைப் படிக்க முயற்சி செய்யுங்கள்" என்றார்.

தமிழ்ப் பேராயத்தின் தலைவர் கரு.நாகராசன், தனது இளம் வயதில் குன்றக்குடி அடிகளாரின் தமிழ்ப் புலமையையும் பேச்சுத் திறமையையும் எண்ணி போற்றியதை மாணவர்களிடம் பகிர்ந்தார்.

கருத்தரங்கின் தொடக்க விழாவில் சிறப்புரை வழங்கிய பாரதிகிருஷ்ணகுமார், "புத்தகங்கள் கொடுத்து மனிதர்களை நெறிப்படுத்திய பெருமை அடிகளாரையே சேரும். இரவு 9 மணிக்கு தொடங்கும் பட்டிமன்றத்தை தொடர்ந்து 5 மணி நேரம் தரையில் அமர்ந்து அடிகளாரின் மேடைப் பேச்சை கேட்டு பயின்ற மாணவன் நான். என் மேடைப் பேச்சை கேட்ட அடிகளார், எனக்கு 'பாரதி' என்ற புனைபெயரை வழங்கினார்" என்றார்.

அதேபோல, "பொன்னம்பல அடிகளார் தன் முன் எவரும் தவறான தகவலை சொன்னால், அவர்களின் பேச்சை நிறுத்திவிட்டு, கூறும் கருத்துக்கு சரியான தரவை கூறிவிட்டு பேச்சை தொடரச் சொல்லுவார். இதுமட்டுமல்லாமல், குடிநீர், விவசாயம், கல்வி சார்ந்த பல்வேறு சமூக இன்னல்களுக்கு சமரசமின்றி குரல் கொடுத்துள்ளார்" என்று அடிகளாரின் பெருமைகளைப் போற்றினார்.

தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், ஆதீன கர்த்தர், குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் பேசும்போது, "ஒருவர் உயர்ந்த அதிகாரத்தில் இருக்கிறார் என்பதற்காக மட்டும் மதிக்காமல், அவர் கொண்டுள்ள அன்பு, பண்பு மற்றும் உயர்ந்த நெறிகளுக்காகவும் மதிக்க வேண்டும்" என்று கூறி மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார்.




எஸ்ஆர்எம் பல்கலை. நடத்திய தவத்திரு குன்றக்குடி அடிகளார் நூற்றாண்டு கருத்தரங்கில் பங்கேற்றோர்.